**வடமேல் மாகாண சபை - 2017**

---

வடமேல் மாகாண சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கிய கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ்,கணக்காய்வு செய்யப்பட்டன. மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் இவ்வறிக்கை வழங்கப்படுகின்றது.

## 1.2 நிதிக் கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கேற்ப தயாரிக்கப்படுதலும் நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுதலும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய போதுமானளவு தவறான கூற்றுக்கள் அற்ற நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடியவாறு தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தலும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் காணப்படும் தொகைகளுக்கும் வெளிப்படுத்தல்களுக்கும் உபயோகப்படும் கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை

வடிவமைக்கும் வகையில் மாகாண சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி மாகாண சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவம் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, வடமேல் மாகாண சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 மாகாண சபை நிதியம்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான மாகாண சபையினது நிதிக் கூற்றுக்கள் 2018 ஏப்ரல் 02 ஆந் திகதியன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 2.2.2 ஏனைய கணக்குகள்

2018 ஆகஸ்ட் 31 இல் உள்ளவாறு மாகாண சபையின் ஏனைய கணக்குகள் சமர்ப்பிக்கப்படுவதின் முன்னேற்றம் பின்வருமாறு.

| | கணக்கின் பெயர் | 2017 ஆம் ஆண்டிற்கானது<br>மொத்தக் கணக்குகளது எண்ணிக்கை | சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை | சமர்ப்பிக்கப்படாத கணக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | ஒதுக்கீட்டுக் கணக்கு | 29 | 29 | - |
| (ii) | மாகாண அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு | 76 | 72 | 04 |
| (iii) | மாகாண சபை அங்கத்தவர்களுக்கான கடன் வசதி முற்பணக் கணக்கு | 01 | 01 | - |
| (iv) | வணிக முற்பணக் கணக்கு | 07 | 06 | 01 |
| (v) | நிதிய மற்றும் சட்டவாக்க கணக்கு | 14 | 14 | - |
| (vi) | வருமானக் கணக்கு | 26 | 26 | - |
| | **மொத்தம்** | **153** | **148** | **05** |

### 2.2.3 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கணக்கீட்டுக் கொள்கைகளில் நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்கள் மற்றும் பொதுத் துறையினால் பின்பற்றப்படும் சர்வதேச ரீதியாக ஏறறுக்கொள்ளப்பட்ட காசு அடிப்படையில் கணக்கு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது.

### 2.2.4. பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

#### (அ) பெற வேண்டிய கணக்குகள்

(i) பிரதான அமைச்சின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட முற்பண நடவடிக்கையொன்றான விஸ்கம விடுதியை நடாத்திச் செல்வதற்கான பல வருடங்களுக்கு முன்னர் வழங்கப்பட்டிருந்த ரூபா 7,038,211 ஆன முற்பணத்தை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மாகாண சபையின் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் பிரதேச செயலகங்கள் உட்பட 45 நிறுவனங்களின் இடமாற்றம் பெற்றுச் சென்ற, மரணித்த, இறந்த, சேவையை விட்டுச் சென்ற, வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட மற்றும் ஏனைய காரணங்களின் பேரில் தீர்வு செய்யப்படாத ஊழியர் கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 66,861,779 ஆக இருந்தது.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

---

(i) அங்கீகரிக்கப்பட்ட முற்பண நடவடிக்கைகளுக்காக கடனாக நிதி நிலைமைக்கூற்றில் ரூபா 135,371,629 எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அம் மீதி வணிக முற்பணக் கணக்குகளிலிருந்து கிடைக்க வேண்டிய பெறுமதி ஒன்றுக்கொன்ற ஈடுசெய்யப்பட்டதன் பின்னரான பெறுமதியொன்றாக இருந்தது.

(ii) மாகாண மாகாண சபையின் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் பிரதேச செயலகங்கள் உட்பட 21 நிறுவனங்களிலிருந்து மாற்றம் பெற்று வந்த உத்தியோகத்தர்களின் ரூபா 49,703,777 கூட்டுத்தொகையான கடன்மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) பொது வைப்புகள்**

---

மீளாய்வாண்டின் இறுதியில் மாகாண சபைக்குரிய அமைச்சுக்கள், திணைக்களங்கள் உட்பட 13 நிறுவனங்களில் 02 ஆண்டுகளை மிகைத்த ரூபா 3,193,847 பெறுமதியான வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---

பிரதான செயலகத்தினால் மாரவில வைத்தியசாலைக்கும் மாகாண விவசாய அமைச்சிற்கும் வழங்கப்பட்டிருந்த 02 வாகனங்களுக்கு 2013 மற்றும் 2014 ஆண்டுகளின் போது இடம்பெற்றிருந்த விபத்துகளுக்காக ரூபா 4,460,000 ஆன காப்புறுதி இழப்பீட்டை அறவிட்டமைக்கான உறுதிப்படுத்தும் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.7. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

---

தெரிவுச் செவ்வைகளின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) நியதிச்சட்ட ஏற்பாடுகள் | |
| (i) 2006 இன் 21 ஆம் இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்களை பதிவு செய்யும் சட்டத்தின் 3.5 ஆம் பிரிவு | தனியார் மருத்துவ நிறுவனங்களை பதிவு செய்தல் / வருடாந்த பதிவினை புதுப்பிப்பதற்காக சேகரிக்கப்பட்ட கட்டணங்கள் என்பவற்றில் 50 சதவீதம் மாகாண சபை நிதியத்திற்கு செலவு வைக்கப்படாமல் வடமேல் மாகாண சுகாதார சேவை பணிப்பாளரின் கீழ் செயற்படுத்தப்படும் விஷேட கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. |
| (ii) வடமேல் மாகாண சபையின் வீதி அபிவிருத்தி நியதிச் சட்டத்தின் 23(1) மற்றும் 33(1) பிரிவு | வீதியின் இருபக்க நிர்மாண எல்லைகளை கருத்திற் கொள்ளாமல் வாரியபொல பிரதேச பொறியியலாளர் அலுவலகத்தின் மூலம் இரண்டு வீதிகளில் அனுமதியற்ற நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |

(ஆ) வடமேல் மாகாண நிதி விதிக்கோவை

| | | |
|---|---|---|
| (i) | மா.நி.வி 475.1 | விளையாட்டு அமைச்சிற்கு இணைக்கப்பட்டு சேவை புரியும் முன்னால் உள்ளூராட்சி மன்ற ஆணையாளருக்கும் முன்னால் உதவி உள்ளூராட்சி மன்ற ஆணையாளருக்கும் வழங்கப்பட்டிருந்த 2 மடிக் கணனிகள் உட்பட்ட 08 உப பாகங்கள் 2018 ஏப்ரல் வரையிலும் மீள கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | மா.நி.வி 492 | பயன்படுத்த முடியாதென வருடாந்த பொருள் மெய்மையாய்வில் இனங்காணப்பட்ட பொருட்கள் மாத்திரம் அழிக்க முடியுமாக இருந்த போதிலும், அச் செயற்பாட்டிலிருந்த விலகி நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் 68 பொருள் விடயங்கள் 2017 ஏப்ரல் மாதத்தில் அழிக்கப்பட்டிருந்தது. |

(இ) பொது நிர்வாக சுற்றறிக்கை

| | | |
|---|---|---|
| (i) | 2013 ஒக்தோபர் 07 ஆந் திகதிய 21/2013 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையயின் 02 (ஆ) மற்றும் (ஈ) பிரிவுகள் | • வார இறுதி நாட்களிலும் விடுமுறை தினங்களிலும் கடமை நிறைவேற்று வதற்காக அமைச்சு செயலாளரினதும் பிரதான செயலாளரினதும் அனுமதியை பெற்றுக் கொள்ளாமல் உத்தி யோத்தரொரு வருக்கு 2017 சனவரி மாதம் முதல் நவம்பர் |

| | | |
|---|---|---|
| | | வரை விடுமுறை தினப் படிகளாக ரூபா 167,617 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.<br><br>• நீர்பாசன திணைக்களத்தின் 20 உத்தியோத்தர்கள் வார இறுதி நாட்களிலும் அரச விடுமுறை தினங்களினும் ஒரு மாதத்திற்கு 02 நாட்களை விஞ்சி அமைச்சு செயலாளரின் முன் அங்கீகாரமின்றி சேவையில் ஈடுபடுத்தி மீளாய்வாண்டில் 254 நாட்களுக்காக ரூபா 426,566 விடுமுறை தினப் படிகளாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ii) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதி 29/30 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | வாகனங்களின் பகுதிகளாக வேறாக்காமல் வெளிவாரியாக பரீட்சிக்கப்பட்டதன் பின்னர் சமர்ப்பிக்கப்படும் கூறுவிலை அடிப்படையில் 13 சந்தர்ப்பங்களின் போது உள்ளூராட்சி மன்ற திணைக்களத்திற்குரிய 06 வாகனங்கள் ரூபா 2,038,068 தொகை உள்ளக திருத்த வேலைகள் மேற்கொள்ளப் பட்டிருந்தன. திருத்த வேலைகளின் போது பொருத்தப்பட்ட உதிரிப் பாகங்களின் கூறுவிலைகளின் சாதாரண தன்மையை உறுதிப்படுத்தாமல் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |

(ஈ) தேசிய பாதீட்டு சுற்றறிக்கை

---

| | |
|---|---|
| 2016 மார்ச் 17 ஆந் திகதிய தேசிய பாதீட்டு சுற்றறிக்கை இலக்கம் 01/2016 இன் 02 பிரிவு | “அண்மைய பாடசாலை சிறந்த பாடசாலை செயற்திட்டத்தை செயற்படுத்தும் போது வடமேல் மாகாணத்தின் பொறியியல் திணைக்களத்தினால் பொது திறைசேரியின் முன்னங்கீகாரம் பெற்றுக் கொள்ளாமல் வாகனங்களை வாடகைக்கு பெற்றுக் கொண்டு மீளாய்வாண்டின் போது 09 வாகனங்களுக்கு ரூபா 12,616,915 மற்றும் 2016 ஆம் ஆண்டின் போது 10 வாகனங்களுக்காக ரூபா 6,526,548 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |

(உ) ஏனைய சுற்றறிக்கை

---

| | |
|---|---|
| (i) பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.4.4 பிரிவு | வடமேல் பொறியியலாளர் திணைக்களத்தினால் 02 பாடசாலைகளில் தொழில்நுட்பவியல் கட்டிடங்கள் நிர்மாணிக்கும் போதும் பாடசாலையொன்றின் இரண்டு மாடி கனிஷ்ட இரண்டாம் தர ஆய்வுகூட கட்டிடங்களை நிர்மாணிக்கும் போது அங்கீகரிக்கப்பட்ட எல்லையை மிகைத்து ரூபா 5,181,370 ஆன முற்பணம் ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. |
| (ii) 2013 திசெம்பர் 13 ஆந் திகதிய வ/பணி/சாப/ 10/05/01 ஆம் இலக்க வடமேல் மாகாண கல்வி செயலாளரின் கடிதம் | புத்தளம் வலயக் கல்வி அலுவலகத்தின் வாகனங் களுக்காக மாதாந்தம் 450 லீற்றர் வீதம் எரிபொருள் அங்கீ கரிக்கப்பட்டிருந்த போதிலும், 2017 சனவரி முதல் நவம்பர் வரையான காலப் பகுதியில் அங்கீகரிக்கப்பட்ட |

எல்லையை மிகைத்து 3,604 லீற்றர் எரிபாருள் அமைச்சின் செயலாளரின் அங்கீகாரமின்றி பயன்படுத்தப்பட்டிருந்தது.

### 2.2.7 போதிய அதிகாரத்தால் உறுதி செய்யப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

உயிர் மருத்துவ பொறியியலாளரது பரிந்துரையின்றி 2016 ஆம் ஆண்டில் ரூபா 134.62 பெறுமதியான சத்திர சிகிச்சை உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

## 03. வருமான முகாமைத்துவம்

மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் மாகாண சபையின் ஒவ்வொரு வருமானக் குறியீட்டின் கீழும் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானம் பின்வருமாறாகும்.

| | | **2017** | | **2017** | |
|---|---|---|---|---|---|
| **வருமானக் குறியீட்டின் இலக்கம்** | **வருமான விபரம்** | **மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா.மில்** | **உள்ளவாறான வருமானம் ரூபா.மில்** | **மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா.மில்** | **உள்ளவாறான வருமானம் ரூபா.மில்** |
| 10.02, 10.03 | உற்பத்தி மற்றும் செலவினம் மீதான வரி | 7,830.13 | 7,144.71 | 6,653.00 | 6,555.69 |
| 20.02 | குத்தகை வாடகை, வட்டி, இலாபம், பங்கிலாபம் என்பன | 235.00 | 249.31 | 298.00 | 211.46 |
| 20..03 | விற்பனையும் கட்டணங்களும் | 562.00 | 674.86 | 540.00 | 613.06 |
| 20.06 | மூலதனச் சொத்து விற்பனை | 25.00 | 13.29 | 25.00 | 2.32 |
| | **மொத்தம்** | **8,652.13** | **8,082.17** | **7,516.00** | **7,382.53** |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 ஆம் ஆண்டில் வடமேல் மாகாண வருமானத் திணைக்களத்தினால் மாகாண திறைசேரியின் அங்கீகாரமின்றி 02 வருமானக் குறியீடுகளுக்குரிய ரூபா 10,982,093 கூட்டுப்பெறுமதியான நிலுவை வருமானம் பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ஆ) ரிதீகம பிரதேச செயலகத்திற்குரிய 01 ரூட் 10.3 பேர்ச் அளவிலான காணி சமூர்த்தி அபிவிருத்தி திணைக்களத்திற்கு நீண்டகால குத்தகைக்கு வழங்குவதற்காக 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டிற்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 691,680 தொகை 2018 மே வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) குருணாகல் பிரதேச அதிகாரத்திற்குட்பட்ட குருணாகல் மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள 0.4135 ஹெக்டோர் காணியும் அதில் அமைந்துள்ள கட்டிடமொன்றும் தனியார் நிறுவனமொன்றுக்கு நீண்டகால குத்தகைக்கு வழங்கியமைக்காக 2014 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 28,000,000 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 04. நிதிசார் மீளாய்வு

### 4.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக மாகாண சபை நிதியத்தின் மிகை ரூபா 1,407,616,828 ஆக இருந்ததுடன், இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 216,897,422 ஆகும்.

### 4.2 பகுப்பாய்வுடனான நிதிசார் மீளாய்வு

#### வருமானமும் செலவினமும்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் வருமானம் மற்றும் செலவினம் தொடர்பான பொழிப்பொன்று கீழே காட்டப்பட்டுள்ளது.

| | 2017 | | | 2016 | | |
|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப் பட்டது | உள்ளவா றானது | வேறுபாடு | மதிப்பிடப் பட்டது | உள்ளவா றானது | வேறுபாடு |
| | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் |
| **வருமானம்** | | | | | | |
| வரி வருமானம் | 7,830.12 | 7,144.71 | 685.41 | 6,653.00 | 6,555.69 | 97.31 |
| வரியல்லாத வருமானம் | 822.00 | 946.86 | (124.86 | 863.00 | 826.84 | 36.16 |
| அரச மானியம் | 33,052.02 | 28,664.95 | 4,387.07 | 35,345.88 | 25,700.77 | 9,645.11 |
| வேறு பெறுவனவுகள் | 185.00 | 107.25 | 77.75 | 195.03 | 135.72 | 59.31 |
| மொத்தம் | **41,889.14** | **36,863.77** | **5,025.37** | **43,056.91** | **33,219.02** | **9,837.89** |
| **மீண்டெழும் செலவினம்** | | | | | | |
| ஆளுக்குரிய வேதனம் | 23,968.75 | 23,315.45 | 653.30 | 23,285.91 | 23,225.71 | 60.20 |
| ஏனையவை | 6,949.39 | 5,490.89 | 1,458.50 | 6,073.60 | 4,998.35 | 1,075.25 |
| உப மொத்தம் | 30,918.14 | 28,806.34 | 2,111.80 | 29,359.51 | 28,224.06 | 1,135.45 |
| மூலதனச் செலவினம் | 10,971.00 | 6,649.81 | 4,321.19 | 13,697.40 | 4,778.06 | 8,919.34 |
| மொத்தம் | **41,889.14** | **35,456.15** | **6,432.99** | **43,056.91** | **33,002.12** | **10,054.79** |

மீளாய்வாண்டினது மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினங்களுக்கிடையேயான விகிதம் 5:1 ஆகும்.

## 4.3 நிருவகத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டரீதியான சம்பவங்கள்

மாகாண திறைசேரி வைப்புக் கணக்கின் கீழ் நட்டங்கள் மற்றும் சேதங்களாக காண்பிக்கப்படும் கிரிஉல்ல வலய அலுவலகத்தில் இடம்பெற்ற நிதி மோசடியைப் பதிவழிப்பதற்காக வழங்கப்பட்ட ரூபா 13,609,655 தொகை மீள அறவிடப்படாதிருந்ததுடன் இது தொடர்பாக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும்

சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. இம்மோசடிக்கு மக்கள் வங்கி சட்டரீதியாக பொறுப்பேற்க வேண்டுமென தீர்மானிக்கப்பட்டால் பொறுப்புக்கூற வேண்டிய வங்கியொன்றக அந்நட்டத்தை கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக 2011 யூன் 30 ஆந் திகதி அறிவித்திருந்தது.

05. **நியதிச்சட்ட கணக்குகள்/ நிதியக்கணக்குகள்/ வணிக முற்பணக் கணக்குகள் மற்றும் ஏனைய முற்பணக் கணக்குகள்**

5.1 **அதிகாரசபைக் கணக்குகள் / நிதியக் கணக்குகள்**

**5.1.1 கணக்காய்வு அபிப்பிராயம்**

வடமேல் மாகாண சபையில் நிறுவப்பட்டுள்ள 09 அதிகாரசபைகள் மற்றும் 05 நிதியங்கள் தொடர்பான முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயம் வழங்கப்பட்டிருந்தன.

**5.1.2 மனிதவள அபிவிருத்தி அதிகாரசபை**

**(அ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு**

மாகாண நிதி விதி 274 இன் பிரகாரம் மாகாண சபையின் எந்தவொரு வங்கிக் கணக்கிலிருந்தும் வங்கி மேலதிகப் பற்று வசதிகள் பெறறுக்கொள்வது தடை செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் ஒரு வங்கிக் கணக்கில் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 19,890,053 ஆன வங்கி மேலதிகப் பற்று காணப்பட்டது.

**(ஆ) செயலாற்றல்**

05 கடன் முன்மொழிவுகளின் கீழ் வழங்கப்பட்டு மீளச் செலுத்தும் காலம் கடந்திருந்த 05 ஆண்டுகளுக்கு மேல் பழமையான பழைய கடன் மற்றும் நிலுவை வட்டி முறையே ரூபா 12,986,075 மற்றும் ரூபா 3,391,315 ஆக இருந்தன. மேலும் 03 ஆண்டுகளை விஞ்சியிருந்த கடன் தவணைகளின் கூட்டுத்தொகை ரூபா 21,490,189 ஆக இருந்தது.

### (இ) முறையற்ற நியமனங்கள்

(i) அதிகாரசபையினால் பொது நிர்வாக சுற்றறிக்கை 25/2014 இற்கு முரணாக 16 நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் அந்நியமனங்களுக்காக 2014 ஒக்தோபர் 24 ஆந் திகதி முதல் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்காக ரூபா 19,573,064 ஆன சம்பளம் படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன.

(ii) அதிகாரசபையின் பதவியணியில் வெளிக்கள உதவி உத்தியோகத்தரொருவர் மிகையாக காணப்படும் போது 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் 03 வெளிக்கள உத்தியோகத்தர்களும் 2016 ஆம் ஆண்டில் முகாமைத்துவ உதவியாளர் ஒருவரும் ஒப்பந்த அடிப்படை ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர். 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அம்மிகை பதவியணிக்காக ரூபா 3,288,278 தொகை சம்பளம் மற்றும் படிகளாக செலுத்தப்பட்டிருந்தன.

## 5.1.3 வடமேல் மாகாண அபிவிருத்தி அதிகாரசபை

### (அ) மனிதவள முகாமைத்துவம்

(i) பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் பதவியான பணிப்பாளர் நாயகப் பதவிக்காக 2016 ஒக்தோபர் 16 ஆந் திகதி முதல் பதில் கடமை அடிப்படையில் உத்தியோகத்தர் ஒருவர் இணைக்கப்பட்டிருந்தார்.

(ii) அங்கீகரிக்கப்பட்ட இரண்டு பிரதி பணிப்பாளர் பதவிகள் மற்றும் கணக்காளர் பதவிகளுக்காக பொருத்தமானவர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையால் பதில் கடமை அடிப்படையில் அப்பதவிகளில் நியமனம் வழங்கப்பட்டிருந்தன.

### (ஆ) செயற்பாட்டு வினைத்திறனின்மை

2014 ஆம் ஆண்டில் ரூபா 53.3 செலவிடப்பட்டிருந்த மதுரங்குளி சுற்றுலா தகவல் மற்றும் வசதிகள் நிலையத்தின் நடவடிக்கை 2017 ஆம் ஆண்டின் இறுதி வரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.1.4 வடமேல் மாகாண இயந்திர சாதன அதிகாரசபை

ரூபா 69,267,620 தொகையான ஆரம்ப கடன்பட்டோர் மீதிகளிலிருந்து ரூபா 3,206,444 அங்கீகாரமொன்று இல்லாமல் ஆண்டின் போது பதிவழிக்கப்பட்டிருந்தது.

### 5.1.5 வடமேல் மாகாண ஜனகலா மன்றம்

2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பல வருடங்களாக தொடர்ந்தும் நட்டத்தில் நடாத்திச் செல்லப்படும விஸ்கம் விற்பனை நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இருப்புக்களின் கூட்டுத்தொகை ரூபா 4,010,243 ஆக இருந்தது.

### 5.1.6 வடமேல் மாகாண சுற்றாடல் அதிகாரசபை

சுற்றாடல் அனுமதிப்பத்திரத்தைப் பெற்றிராத கைத்தொழில்களை நடாத்திச் செல்லும் கைத்தொழிலாளர்கள் தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடைமுறைகள் தொடர்பாக சுற்றாடல் சட்டவாக்கங்களை அமுலாக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படாதிருந்ததுடன், அவ்வாறான நிர்மாணங்கள் மூலம் சுற்றாடலுக்கு ஏற்படுத்தும் சேதங்களை குறைப்பதற்கு எடுக்கப்பட வேண்டிய சட்டரீதியான நடவடிக்கைகள் தொடர்பாக முறையான வேலைத்திட்டமொன்று இனங்காணப்பட்டு செயற்படுத்துவதற்கு அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 5.1.7 கைத்தொழில் சேவைப் பணியகம்

#### (அ) செலுத்த வேண்டிய கணக்குகள்

ஹெரலியாவல கைத்தொழில் பேட்டையின் காணி குத்தகையிலிருந்து மாகாண சபை நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 4,343,490 மற்றும் மாகாண கைத்தொழில் நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 1,786,300 தொகையை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### (ஆ) முகாமைத்துவ செயற்திறனின்மை

2014 ஆம் ஆண்டில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் விரிவான அறிக்கையின் 4.3.2(அ) மற்றும் 4.4.1(ஆ) கணக்காய்வுப் பந்திகளுக்கு உரிய 2017 மார்ச் 16 ஆந் திகதி நடாத்தப்பட்ட மாகாண கணக்கு குழுத் தீர்மானத்தின் பிரகாரம் ரூபா 1,484,000 தொகையை பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து மூன்று மாதங்களுக்குள் அறவிட்டு கணக்கு

குழுவிற்காக அறிவிக்கப்பட வேண்டிய போதிலும் 2018 யூலை 10 ஆந் திகதி வரையிலும் உரிய வழங்குனரிடமிருந்து அறவிடப்பட்ட ரூபா 823,333 தொகையை மாத்திரம் வடமேல் மாகாண பிரதான செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது

**(இ) முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

---

மீளாய்வாண்டில் பூர்த்தி செய்யப்பட்ட நிர்மாணங்களுக்காக செலுத்த வேண்டிய ஊக்குவிப்பு படிகள் ரூபா 6,198,363 ஆக இருந்த போதிலும் ரூபா 13,165,646 ஊக்குவிப்பு படிகளாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மேலும் மீளாய்வாண்டில் 111 நிர்மாண வேலைகளை பூர்த்தி செய்வதற்கு முன்னர் ரூபா 2,089,500 கூட்டுத்தொகை ஊக்குவிப்பு முற்பணமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**5.1.8 முதலமைச்சர் நிதியம்**

---

2017 ஆம் ஆண்டிற்காக ரூபா 3,936,000 தொகையான நிதியத்தின் திரட்டிய செலவினத்திலிருந்து ரூபா 3,916,000 மருத்துவ உதவிக்காக மாத்திரம் செலவிடப்பட்டிருந்ததுடன் மானியங்கள் வழங்கப்பட வேண்டிய ஏனைய துறைகள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**5.1.9 வடமேல் பிராந்திய வள அபிவிருத்தி அதிகாரசபை**

---

**(அ) செயலாற்றல்**

---

அதிகாரசபை தாபித்தல் தொடர்பாக 2001 இன் 01 ஆம் இலக்க பிரதேச வளங்கல் அபிவிருத்தி அதிகாரசபை நியதிச்சட்டத்தின் பிரகாரம் நோக்கங்களுக்குரிய முன்னைய ஆண்டுகளின் போது உட்பட மீளாய்வாண்டின் போதும் அதிகாரசபை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) விளைவற்ற சொத்துக்கள்**

---

ரூபா 4,140,000 ஆன மீன் வளர்ப்பு நிலையக் கட்டிடங்கள் மற்றும் ரூபா 4,925,000 தொகையான அழகு மீன் தடாகம் என்பன 5 ஆண்டுகளாக விளைவற்றுக் காணப்பட்டன.

### 5.1.10 வடமேல் மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அபிவிருத்தி அதிகாரசபை

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் இறுதியில் 02 ஆண்டு முதல் 17 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலமாக கிடைக்க வேண்டியிருந்த ரூபா 6,125,718 ஐ அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) முகாமைத்துவ செயற்திறனின்மை**

சாரதி பயிற்சி நிலையத்தின் வருமானம் முன்னைய ஆண்டிற்க ஒப்பாக மீளாய்வாண்டில் 61 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தமை.

**(இ) செயற்பாட்டு வினைத்திறனின்மை**

பல சந்தர்ப்பங்களில் அறவிடும் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த வீதி அனுமதிப்பத்திரங்களிலிருந்து 2011 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டுவரை அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 2,336,000 ஆக இருந்தது.

### 5.1.11 வடமேல் மாகாண கூட்டுறவு ஊழியர் ஓய்வூதியத் திட்டம்

கூட்டுறவு சங்கமொன்றுக்கு ரூபா 25,000 வீதம் நூலகப் புத்தகங்கள் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டிலும் அச் செயற்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

### 5.1.12 விளையாட்டு நிதியம்

**முகாமைத்துவ வினைத்திறனின்மை**

(அ) குளியாப்பிட்டிய சிற்பவியலாளர் காப்பளர் நிலையம் ஆரம்பிக்கப்பட்டு 25 ஆண்டு காலம் கடந்திருந்த போதிலும் அந்நிலையம் அமைந்துள்ள காணியை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உடற்பயிற்சி பிரிவிற்கு மதியுரையாளர் ஒருவர் இயலாத காரணத்தினால் அங்குள்ள உபகரணங்கள் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாமல் இருந்தன.

## 5.2 வர்த்தக முற்பணக் கணக்குகள்

### 5.2.1 சிறு கைத்தொழில் திணைக்களத்தின் மூலப் பொருட்களை வழங்குதல் அடங்கலாக கைத்தொழில் வேலைத்தளங்களை உருவாக்குதல் மற்றும் அதன் நிர்வாகம் தொடர்பான முற்பணக் கணக்கு

(அ) மீளாய்வாண்டின் வர்த்தக முற்பணக் கணக்கு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதி வரையில் 10 ஆண்டுகள் கடந்திருந்த ரூபா 1,479,794 தொகையான பெறவேண்டிய கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2.2 வடமேல் மாகாண பயிற்சி நிலையத்தின் வர்த்தக முற்பணக் கணக்கு

அங்கீகரிக்கப்பட்ட உயர் எல்லை ரூபா 16,000,000 ஆக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு மொத்தச் செலவினம் ரூபா 16,799,064 ஆக இருந்தமையால் ரூபா 779,064 ஆல் செலவினத்தின் உயர் எல்லை மிகைத்திருந்தது.

### 5.2.3 புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் மூலப் பொருட்களை வழங்குதல் அடங்கலாக புடவைக் கைத்தொழில் வேலைத்தளங்களை உருவாக்குதல் மற்றும் அதன் நிர்வாகம் தொடர்பான முற்பணக் கணக்கு

(அ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 8,689,094 தொகையான கடன்பட்டோரிடமிருந்து ரூபா 6,726,643 அரச நிறுவனங்களிடமிருந்து கிடைக்க வேண்டியதாக இருந்ததுடன் அக்கடனை கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதி வரையில் காணப்பட்ட ரூபா 28,992,754 ஆன நூல் இருப்பு 03 ஆண்டுகளுக்கான தேவைப்பாட்டை மிகைத்திருந்தது.

(இ) ரூபா 1,595,120 ஆன இருப்பு பற்றாக்குறை 02 ஆண்டுகளுக்கு மேற்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

5.2.4 **சிறு கைத்தொழில் திணைக்களத்தின் தொழில்நுட்ப பாடசாலைகளை நடாத்திச்செல்வதற்கான வர்த்தக முற்பணக் கணக்கு**

(அ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,566,880 தொகையான கடன்பட்டோர் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 ஆம் ஆண்டில் பயன்படுத்தப்பட்ட மூலப்பொருட்களின் கிரயம் ரூபா 155,990 ஆக இருந்த போதிலும் ஆண்டின் இறுதியில் ரூபா 3,500,074 தொகையான மூலப்பொருள் காணப்பட்டன.

**6. செயற்பாட்டு மீளாய்வு**

**6.1 செயலாற்றல்**

**6.1.1 கல்வி**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) வடமேல் மாகாணத்தினுள் அமைந்துள்ள பாடசாலைகளிலிருந்து 2014, 2015 மற்றும் 2016 ஆண்டுகளில் உயர்தர வரிசையில் சகல பாடங்களிலும் சித்தியடையாதிருந்த பாடசாலைகளின் எண்ணிக்கை 43, 52 மற்றும் 56 ஆக இருந்தது.

(ஆ) புத்தளம் கல்வி வலயத்தில் க.பொ.த (உ.தரம்) 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது சித்தியடையாத சதவீதம் 40 சதவீதம் முதல் 35 சதவீதம் வரை குறைவடைந்திருந்த போதிலும் உயிரியல், கணிதம் மற்றும் பொறியியல் தொழில்நுட்ப பிரிவு ஆகிய பிரிவுகளின் மாணவர்களில் 50 சதவீதத்தை வீஞ்சிய சதவீதமொன்று சித்தியடைதிருக்கவில்லை.

(இ) வடமேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாடசாலைகளில் 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் சாதாரண தரப்பரீட்சையின் சகல பாடங்களிலும் சித்தியடையாத மாணவர்கள் இருந்த பாடசாலைகளின் எண்ணிக்கை முறையே 65, 30 மற்றும் 10 ஆக இருந்தன.

(ஈ) குளியாப்பிட்டிய குருணாகல், கிரிஉல்ல மற்றும் மஹவ வலயக்கல்வி அலுவலங்களுக்குரிய பாடசாலைகளில் 6 ஆந் தரத்திலிருந்து 11 ஆந் தரம் வரை மொழி, கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், வரலாறு மற்றும் சமயம் போன்ற பிரதான பாடங்களுக்காக 40 புள்ளிகளை விட குறைவாகப் பெற்றுக்

கொண்ட மாணவர்கள் எண்ணிக்கையொன்று காணப்பட்ட பாடசாலைகளின் எண்ணிக்கை 2016 ஆம் ஆண்டின் தவணைப் பரீட்சையில் 376 மற்றும் 2017 ஆம் ஆண்டின் இரண்டாம் தவணைப் பரீட்சையில் 374 ஆக இருந்தன.

(உ) புத்தளம் வலயக்கல்வி அலுவலகத்தின் இரண்டு நிகழ்ச்சித்திட்டங்களுக்கு 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் கிடைத்திருந்த ரூபா 419,900 கூட்டுத்தொகையாக எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகள் மேற்கொள்ளப்படாமல் 2018 மார்ச் வரையிலும் பொது வைப்புக்கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

(ஊ) புத்தளம் கல்வி வலயத்தின் ஆசிரியர் சேவையில் 58 ஆசிரியர்கள் அதிபர் பதவிகளில் கடமை மேவுகைக்கு ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அதிபர் சேவையின் 51 பேர் பிரதி அதிபர் பதவிகளில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

### 6.1.2 சுகாதாரம்

------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பொல்பிதிகம பிரதேசத்தின் 2015 ஆம் ஆண்டின்போது இனங்காணப்பட்டிருந்த 1,714 சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை 2016 ஆம் ஆண்டின் போது 2,321 என 35 சதவீதத்தினாலும் 2017 ஆம் ஆண்டின் போது 4,065 வரை 75 சதவீதத்தினாலும் அதிகரித்திருந்தது. பிரதேச வைத்தியசாலைகளில் போதியளவு பயிற்சி பெற்ற மருத்துவர்கள் இல்லாமை மற்றும் இரத்து வழிகாட்டல் இயந்திரம் தேவையான போதியளவு இல்லாமை நோய்க் கட்டுப்பாட்டிற்கு தாக்கமளித்திருந்தது.

(ஆ) சிறுநீரகம், இருதய, மற்றும் ஏனைய நோய்களுக்காக ஆனமடுவ ஆதார வைத்தியசாலைக்கு வருடாந்தம் 100,000 நோயளர்கள், 30,000 சிகிச்சை நோயளிகள் மற்றும் 7,000 வதிவிட நோயாளர்கள் சிகிச்சைக்காக வருவதாக அவதானிக்கப்பட்டது. எனினும், அந்த வைத்தியசாலைக்கு போதியளவு விசேட மருத்துவர் மற்றும் ஏனைய மருத்துவ உத்தியோகத்தர்கள் மற்றும் போதியளவு கட்டிட வசதிகள் காணப்படாமை காரணமாக நோயாளர் எப்போதும் புத்தளம் மற்றும் நிகரஹட்டிய வைத்தியசாலைக்கு மாற்றி அனுப்பி வைப்பதற்கு நேர்ந்திருந்தது.

(இ) கும்புக்வெவ ஆரம்ப மருத்துவ சிகிச்சை பிரிவின் வைத்தியர் சேவைக்கு வருகை தராத தினங்களில் சிகிச்சைக்கு வருகை தரும் நோயாளிகளுக்கு மருத்துவ பரிசோதனையொன்று இல்லாமல் நோயாளிகளின் முன்னைய

நோய் விளக்க துண்டுகளுக்கு மருந்தகரால் மருந்துகள் வழங்கப்பட்டிருந்தன.

(ஈ) சிறுநீரக நோய் ஆபத்துடைய வலயங்களாக இனங்காணப்பட்டுள்ள கல்கமுவ மற்றும் மஹவ உட்பட 06 சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களுக்காக சிறுநீரக நோய் தொடர்பான வைத்தியர்கள் காணப்படாமை, கல்கமுவ மற்றும் பொல்பித்திகம வைத்தியசாலைகளில் விசேடத்துவ வைத்திய நிபுணர்கள் காண்பபடாமை, கல்கமுவ வைத்தியசாலைக்கு விசேட கதிர்வீச்சு வைத்தியரொருவர் (Consultant Radiologist) போதியளவு உதவி சுகாதார பதவியணியொன்று நடமாடும் மருந்து ஆய்வுகூடமொன்று மற்றும் போதியளவு வாகன வசதிகள் இல்லாமை போன்ற காரணங்கள் காரணமாக சிறுநீரக நோயாளர் நிவாரண நடவடிக்கைகள் முழு அளவில் மேற்கொள்ளமுடியாமல் இருந்தது.

(உ) டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டத்தை செயற்படுத்துவதற்காக போதியளவு நிதி ஏற்பாடு கிடைக்காமை, போக்குவரத்து வசதிகள் இல்லாமை, பொதுச் சுகாதார பரிசோதகர்கள் போதியளவு இல்லாமை, புகை இயந்திரம் போதியளவில் காணப்படாமை, போன்ற காரணங்களினால் வடமேல் மாகாணத்தில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை வினைத்திறனாக செயற்படுத்த முடியாமல் இருந்தது. இந்நிலையில் 2016 ஆம் ஆண்டின் 2,563 டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 2017 ஆம் ஆண்டின் போது 11,322 வரை 340 சதவீதத்தினாலும் டெங்கு நோயாளர்களின் மரணங்களின் எண்ணிக்கை 02 சதவீதம் முதல் 24 சதவீதம் வரை அதிகரித்திருந்தது

(ஊ) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் புத்தளம் பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் ரூபா 144,000 தொகையான 02 செயற்திட்டங்கள், இரண்டாவது சுகாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் ரூபா 20,100,000 தொகையான 02 செயற்திட்டங்கள் மற்றும் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் ரூபா 10,300,000 தொகையான 09 செயற்திட்டங்கள் மீளாய்வாண்டில் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(எ) லுனுவில பிரதேச வைத்தியசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தில் ஆய்வுகூடமொன்றை கொண்டு நடாத்துவதற்காக இடவசதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் இல்லாமை காரணமாக 2017 முதல் அரையாண்டில் மாத்திரம் 222 நோயாளிகள் வேறு வைத்தியசாலைகளுக்கு மாற்றப்பட்டு அனுப்பி வைப்பதற்கு நேர்ந்திருந்தது.

(ஏ) இரண்டாவது சுகாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சயரோக நோய் தொடர்பான அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டமொன்றிற்காக புத்தளம் மாவட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 100,000 ஆன முழு நிதிஏற்பாடும் மீள அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

(ஐ) டெங்கு ஒழிப்பு நடவடிக்கைக்காக வென்னப்புவ, தங்கொட்டுவ மற்றும் புத்தளம் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களிற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 154,000 நிதி ஏற்பாடுகளில் திட்டமிடப்பட்ட செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமல் ரூபா 104,000 ஆன நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

(ஒ) தலசீமியா நோய் நிவாரண நிகழ்ச்சித்திட்டத்திற்காக 2017 மே 16 ஆந் திகதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளருக்கு விடுவிக்கப்பட்டிருந்த ரூபா 2,188,000 தொகையில் மீளாய்வாண்டின் இறுதிவரையில் ரூபா 36,000 மாத்திரம் செலவிடப்பட்டிருந்ததால் அந்நோய் நிவாரண நடவடிக்கைகள் போதியளவில் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஓ) மீளாய்வாண்டின் இரண்டாவது சுகாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் வெவ்வேறு செலவின விடயங்களின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட நிதி ஏற்பாடுகளின் கீழ் ரூபா 93,707,339 தொகை எதிர்ப்பார்க்கப்பட்ட செயற்பாடுகளுக்காக செலவிடப்படாமல் சேமிக்கப்பட்டிருந்ததுடன் சேமிக்கப்பட்ட சதவீதம் 11 சதவீதம் முதல் 42 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

### 6.1.3 ஏனையவை

---------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சிலாபம் கூட்டுறவு உதவி ஆணையாளர் அலுவலகத்திற்குரிய 62 சங்கங்களை கலைப்பதற்காக கலைப்பாளர்கள் நியமிக்கப்பட்டு 02 ஆண்டுகள் முதல் 18 ஆண்டுகள் வரையான காலப்பகுதியொன்று கடந்திருந்த போதிலும் கலைப்பு நடவடிக்கை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 ஆம் ஆண்டில் வடமேல் மாகாண பிரதான அமைச்சிற்கு வடமேல் மாகாணத்திற்குரிய 33 உள்ளூராட்சி மன்றங்களிலிருந்து நீர் செயற்திட்டங்களுக்கான 298 விண்ணப்பங்கள் கிடைத்திருந்த போதிலும் 11 உள்ளூராட்சி மன்றங்களுக்குரிய 17 வேண்டுகோள்கள் மாத்திரம் செயற்படுத்தப்பட்டிருந்தன.

(இ) 2013 இன் 01 ஆம் இலக்க சமுக அடிப்படையிலான அமைப்புக்களை ஸ்தாபித்தல் மற்றும் முறைப்படுத்தும் நியதிச்சட்டத்தின் கீழ் வடமேல் மாகாண நீர் வழங்கல் மற்றும் சுற்றாடல் ஆரோக்கிய அலகு ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும் அதில் குறிப்பிடப்பட்ட நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு மாகாண அலகு தவறியிருந்தது.

## 6.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

--------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாகாண சுகாதார, சுதேச மருத்துவ, சமுக நலன்புரி, நன்நடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள், மகளிர் அலுவல்கள் மற்றும் சபை அலுவல்கள் தொடர்பான அமைச்சு 2017 ஆம் ஆண்டில் 03 சந்தர்ப்பங்களில் 28 உத்தியோகத்தர்கள் வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு பங்குபெறச் செய்வதற்காக ரூபா 14,489,666 செலவிடப்பட்டிருந்த போதிலும் பொருத்தமானவர்களை தெரிவு செய்யும் நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை..

(ஆ) இரண்டாவது சுகாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வாகனங்களை கொள்வனவு செய்வதற்காக மதிப்பீட்டில் நிதி ஏற்பாடு செய்யப்படாதிருக்கையில் மாகாண நிதி வீதி 30 மற்றும் 32 ஆம் பிரிவுகளின் பிரகாரம் ரூபா 29,700,000 ஆன நிதி ஏற்பாடு மாற்றப்பட்டிருந்தது.

(இ) ரிதீகம ஆதார வைத்தியசாலையின் ஆரோக்கிய நலன் பிரிவினை திருத்தியமைப்பதற்காக தனியார் நிறுவனமொன்றினால் ரூபா 847,928 ஆன மானிய தொகையை வழங்குவதற்கு இணங்கி அதில் ரூபா 423,934 தொகை 2017 ஆகஸ்ட் 24 ஆந் திகதி வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அச் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2016 ஆம் ஆண்டிற்காக அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த திட்டத்தின் பிரகாரம் இரண்டாவது சுகாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் தம்பதெனிய ஆதார வைத்தியசாலையின் சிகிச்சை கழிவுப்பொருட்களை எரிப்பதற்கு பிரிவொன்று நிர்மாணிப்பதற்காக ரூபா 15 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 09 வைத்தியசாலைகளுக்குரிய 44 ஏக்கர் பரப்பளவுடனான கூடிய காணி மற்றும் பரப்பளவு நிச்சயிக்க முடியாத 03 வைத்தியசாலைகளுக்குரிய காணி, அவ் வைத்தியசாலை ஆரம்பிக்கப்பட்டது முதல் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்திற்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையால் அவ் வைத்தியசாலைகளின் நிர்மாணம் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு தடையொன்றாக இருந்தது.

(ஊ) குருணாகல் மாவட்டத்தின் 06 வைத்தியசாலைகளில் எந்தவொரு உத்தியோகபூர்வ இல்லமொன்றும் காணப்படாதிருந்துடன் 30 வைத்தியசாலைகளில் மருத்துவர், தாதியர் உட்பட ஏனைய 167 உத்தியோகப்பூர்வ விடுதிகளுக்கு பற்றாக்குறையொன்று காணப்பட்டன. அந்நிலைமையில் மருத்துவர் உட்பட வைத்தியசாலை பதவியணியினரை அந்த வைத்தியசாலைக்கு இணைக்கும் போது சிக்கலொன்று உருவாகுவதால் நோயாளர் உதவிச் சேவைக்காக அது நேரடியாக தாக்கமளித்திருந்தது.

(எ) யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் மூலம் புதிய நிர்மாணம் உட்பட நவீனமயப்படுத்தப்பட்டிருந்த கல்கமுவ ஆதார வைத்தியசாலைக்கு மருந்துக் களஞ்சியமொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 64 மில்லியனை நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது.

(ஏ) பெறுகை செயற்பாட்டின் தாமதம் மற்றும் வழங்குனரின் தாமதம் காரணமாக 2016 ஆம் ஆண்டில் ரூபா 188.23 ஆன சத்திரசிகிச்சை உபகரணங்கள் நிர்ணயிக்கப்பட்ட காலத்தை விஞ்சி 03 மாதங்கள் முதல் 06 மாதங்கள் வரையான காலதாமதத்துடன் வழங்குவதற்கு நேர்ந்திருந்தது.

(ஐ) வெளிநாட்டு உதவிச் செயற்திட்டமொன்றின் கீழ் கல்கமுவ ஆதார வைத்தியசாலையில் ரூபா 605 மில்லியன் செலவிடப்பட்டு நிமாணிக்கப்பட்டு வார்ட் தொகுதியுடனான கட்டிடத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த சகல உபபாகங்களுடன் கூடிய முழுமையான இரண்டு சத்திர சிகிச்சை கூடங்கள், அதிதீவிர சிகிச்சை பிரிவு, சிறுநீரக நோயாளருக்கான இரத்த மாற்றல் பிரிவு, முதிர்வடையாத சிறுவர் பிரிவு, இரத்த வங்கி, என்டர்ஸ்கோபி அலகு, மருத்துவ வாயு முறைமை போன்ற பிரிவுகளுக்காக உரிய வைத்தியர்கள் உட்பட தேவையான ஏனைய பதவியணியினர் போதியளவில் இல்லாமை காரணமாக அந்த பிரிவுகளுடன் கூடிய கட்டிடம் திறந்து வைக்கப்பட்ட 2017 யூலை 20 ஆந் திகதி முதல் 2018 யூன் 15 ஆந் திகதி வரை விளைவற்றுக் காணப்பட்டது.

(ஒ) வெளிநாட்டு உதவி செயற்திட்டமொன்றின் மூலம் கல்கமுவ வைத்தியசாலை சகல வசதிகளும் கிடைத்திருந்த போதிலும் சுத்தமான நீரை வழங்குவதற்கான வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஓ) நீர்ப்பீடன நோயை தவிர்ப்பதன் கீழ் 2017 ஆம் ஆண்டின் போது 14,000 நாய்களை மலடாக்குதவற்காக ரூபா 14,800,000 மில்லியனான கேள்வி 2017 நவம்பர் 20 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்ததுடன் 2017 ஆம் ஆண்டில் 1,255 நாய்கள் மாத்திரம் மலடாக்கப்பட்டன.அதாவது திட்டமிடப்பட்ட அளவில் 09 சதவீதமாக இருந்தது.

(ஔ) மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் ரூபா 362,322 செலவு செய்து 2016 ஆம் ஆண்டின் போது திருத்தம் செய்யப்பட்ட லொறி வண்டியை விளைவற்ற வகையில் வைத்திருக்கும் போது குருணாகல் மாவட்டத்தில் திரிபோஷா போக்குவரத்து செய்யும் நடவடிக்கைகளுக்கு ரூபா 2,025,438 தொகை தனியார் நிறுவனமொன்றுக்கு செலுத்தப்பட்டிருந்தது.

(க்) நன்நடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு திணைக்களத்தின் கீழ் குளியாப்பிட்டிய மீகஹகொட்டுவ அரசின் மகளிர் தடுப்பு விடுதியில் 45 பிள்ளைகளை தங்கவைப்பதற்கு அனுமதிக்கப்பட்ட அளவாக இருந்த போதிலும் மீளாய்வாண்டில் சராசரியாக 70 பிள்ளைகள் வதிவிட ரீதியில் இருந்ததுடன், மேலதிகமாக தடுத்து வைக்கப்பட்டவர்களுக்காக தேவையான வசதிகளில் பற்றாக்குறையும் அவதானிக்கப்பட்டது. அவ்வாறே தடுத்து வைக்கப்பட்ட மகளிர் பாடசாலை கல்வியை நிராகரிக்கும் சந்தர்ப்பத்தில் சமுகமயப்படுத்துவதற்கு முன்னர் முறையான தொழில் கல்வியொன்றை வழங்குதவற்காக முறையான வேலைத்திட்டமொன்று செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(க) இப்பாகமுவ பிரதேச செயலகப் பிரிவிற்குரிய 5.5 கிலோ மீற்றர் தூர அளவுடைய கொக்ரல்ல-கந்துலவ வீதியின் அபிவிருத்தி நடவடிக்கைகள் நிறைவேற்றப்படாமையால் மக்களின் வாழ்க்கை பாதிப்படைந்திருந்ததுடன் பயணிகள் பேருந்து போக்குவரத்தும் ஓராண்டு காலமாக நிறுத்தப்பட்டிருந்தது.

(கா) பிரதான அமைச்சினால் நலன்புரிச் சங்கம்/சங்கங்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக ரூபா 3,925,000 தொகையான 1,000 பிளாஸ்ரிக்

கதிரைகள் மற்றும் 55 ஒலிபெருக்கி இயந்திரங்கள் பதிவு செய்யப்படாத வழங்குனர் ஒருவரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(கி) தாபன விதிக்கோவையின் V ஆம் அத்தியாயத்தின் 2.5.1 பிரிவின் பிரகாரம் அரச சேவையின் பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவர் வேறொரு சேவைக்கு 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலப்பகுதிக்கு விடுவிக்கப்பட முடியா போதிலும் வடமேல் மாகாணத்தில் 50 ஆசிரியர்கள் முப்படையின் தொண்டர் படையணியின் சேவைக்காக விடுவிக்கப்பட்டு 02 ஆண்டுகள் முடிவடைந்திருந்த போதிலும் மீண்டும் ஆசிரியர் சேவைக்கு அறிக்கையிட்டிருக்கவில்லை. மேலும் அந்த 50 ஆசிரியர்களுக்கு 1991 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை ரூபா 107,422,487 மில்லியன் சம்பளம் வடமேல் மாகாண கல்வி திணைக்களத்தினால் செலுத்தப்பட்டிருந்தது.

(கீ) வடமேல் மாகாணத்தின் 102 பாடசாலைகளில் 125 ஆசிரியர் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த சம்பளமற்ற விடுமுறைகளுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 1,797,966 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் 27 ஆசிரியர்களின் சம்பளமற்ற விடுமுறைகளுக்காக அறவிடப்பட வேண்டிய நிதிசார் பெறுமதி கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(கு) தம்பதெனியா ஆதார வைத்தியசாலைக்கு 2016 திசெம்பர் 28 ஆந் திகதி முதல் பௌதீக கதிர்வீச்சு உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டிருந்த போதிலும் கதிர்வீச்சு பிரிவொன்று நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே பௌதீக கதிர்வீச்சு நடவடிக்கைகளுக்காக தேவையான இயந்திரங்கள் காணப்படாமையால் இயந்திரங்கள் பயன்படுத்தப்படாமல் பௌதீக கதிர்வீச்சு நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தியோகத்தர்களுக்கு நேர்ந்திருந்தது.

**6.3 செயற்பாட்டு வினைத்திறனின்மை**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அமைச்சினால் மீளாய்வாண்டிற்காக ரூபா 14,320,698 ஆன குறைநிரப்பு மதிப்பீடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் கட்டுநிதி பெற்றுக்கொண்டு எதிர்பார்த்த செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காமை காரணமாக ஆண்டின் இறுதியின் போது முழு நிதி ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) திட்டவட்டமான மானியங்களின் கீழ் செயற்படுத்தப்பட்ட 05 செயற்திட்டங்கள் நிதி ஏற்பாடுகளிலிருந்து அந்நோக்கங்களுக்கு முரணாக ரூபா 882,506 ஆன அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(இ) மாகாண ஆயுர்வேத திணைக்களம் மருந்து உற்பத்திசாலையில் உற்பத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த மற்றும் உற்பத்தி செய்யக் கூடிய மருந்துகள் போதியளவில் உற்பத்தி செய்யப்படாததன் காரணமாக அம்மருந்துகளை வெளியிலிருந்து கொள்வனவு செய்தமைக்காக 2017 ஆம் ஆண்டில் ரூபா 5,142,795 செலவிடப்பட்டிருந்தது.

(ஈ) கல்கமுவ ஆதார வைத்தியசாலைக்காக இரத்த வங்கியொன்று ஆரப்பிப்பதற்கு யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் மூலம் கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய உபகரணங்கள் மற்றும் மனித வளங்கள் இல்லாமை காரணமாக அந் நடவடிக்கைகள் ஆரப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 09 வைத்தியசாலைகளில் மருந்துக் களஞ்சியங்களில் காணமல் கட்டிய இடம் போதியளவில் காணப்படாமை, காற்றுச்சீரகாக்கி வசதிகள் காணப்படாமை, குளிரூட்டி வசதிகள் காணப்படாமைமற்றும் தரமற்ற மருந்துகளை களஞ்சியப்படுத்தல் போன்ற காரணங்களினால் களஞ்சியபடுத்தியுள்ள மருந்துகளின் தரம் மற்றும் பாதுகாப்பு தொடர்பில் தாக்கம் ஏற்படக்கூடியதாக இருந்தது.

(ஊ) சுற்றாடலுக்கு சாதகமாக சிகிச்சை அறிவுப்பொருட்கள் அழிக்க வேண்டிய போதிலும் 06 வைத்தியசாலைகள் எரிபொருள் இல்லாமல் வெளியில் - அறிவிக்கப்படுவதாகவும் 05 வைத்தியசாலைகளில் எரிபொருள் காணப்பட்ட போதிலும் உரி தரமில்லாது அறிவுப்பொருட்கள் எரிக்கப்பட்டு வந்தமை அவதானிக்கப்பட்டது.

(எ) தம்பதெனிய ஆதார வைத்தியசாலையின் வார்ட், சிகிச்சை நிலையங்கள் மற்றும் சமையலறையிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர் பிரதான வீதியின் வடிகாண் ஊடாக சுற்றாடலுக்கு பாதகமான வகையில் அருகில் அமைந்துள்ள ஆற்றில் கலப்பதற்கு நீண்டகாலமாகஇடமளிக்கப்பட்டிருந்தது.

(ஏ) 2016 ஆம் ஆண்டின் நிதிஏற்பாடுகள் மூலம் நிக்கவரட்டிய ஆதார வைத்தியசாலைக்கு கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 8,360,386 பெறுமதியான 16 மருத்துவ உபகரணங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரை வைத்தியசாலைக்கு கிடைத்திருக்கவில்லை.

(ஐ) மாகாண காணி ஆணையாளர் திணைக்களத்தின் 2017 திசெம்பர் 31 உள்ளவாறான நிலுவை வருமான அறிக்கையின் பிரகாரம் நிலுவை வரி வருமானத்தில் 50 சதவீதத்திற்கு மேற்பட்ட சதவீதம் அறவிடப்பட வேண்டிய 08 பிரதேச செயலகங்கள் காணப்பட்டதுடன் அறவிடப்பட வேண்டிய வரித்தொகையின் கூட்டுத்தொகை ரூபா 11,675,724 ஆக இருந்தது.

(ஒ) கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்திற்குச் சொந்தமான 53 வாகனங்கள் காணப்பட்ட போதிலும் மாகாண நிதி வீதி 561 இன் 10(ஈ) பிரிவில் குறிப்பிட்டதன் பிரகாரம் வாகன பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. மேலும் வருடக் கணக்காக பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் காணப்படும் 10 வாகனங்களை கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஓ) விவசாய திணைக்களம் தொழில்நுட்ப மதிப்பிட்டு குழுவின் பரிந்துரை பெற்றுக்கொள்ளாமல் மீளாய்வாண்டில் ரூபா 3,400,743 தொகையான விசிரில் நாற்று தட்டுக்கள், எழுது கருவிகள், பொலித்தீன், மரக்கறி இறாக்கைகள், கனபி ஹெட் மற்றும் மரக்கறி பொதியிடல் பைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ஔ) அஸ்வெதும குளத்தில் சேற்றுமண் மற்றும் நீர்த்தாவரங்களை அகற்றுவதற்காக ரூபா 400,000 இற்கு விவசாய அமைப்பொன்றுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன், மதிப்பீட்டின் பிரகாரம் 310 கியுப் மண் அகற்றப்பட வேண்டிய போதிலும் 1,740 கியுப் மண் அகற்றப்பட்டுள்ளதாக கண்டறியப்பட்டது. தரமாகவும் வழிகாட்டலொன்று இல்லாமால் அதிகளவில் சேற்றுமண்ணுடன் கூடிய மண் அகற்றப்பட்டிருந்தமையால் குளத்தில் குழிகள் உருவாகியிருந்தன.

(க்) சிலாபம் பெரிய குளத்தில் நீர்த் தாவரங்களையும் கழிவுகளையும் அகற்றி முழுமையான புனரமைப்பிற்காக ரூபா 499,999 ஆன மதிப்பீட்டில் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் குளத்தில் பாரியளவு மண்வெட்டி போக்குவரத்துச் செய்யப்பட்டுள்ளதாக 2017 ஒக்தோபர் 17 ஆந் திகதிய பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. மேலும் குளிக்கும் இடங்களை புனரமைப்பதற்காக குறிப்பிட்டு பெக்கோ இயந்திரங்களைப் பயன்படுத்தி அனுமதியற்ற மணல் அகற்றப்பட்டு குளிக்குமிடங்களுக்கு அருகில் குவித்து வைக்கப்பட்டிருந்தது.

(கா) மீளாய்வாண்டின்போது மீனவர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட பொருட்கள் முறைாக இனங்காணப்படாமல் திட்டமிடப்பட்டு பிரதேச வள அபிவிருத்தி அதிகாரசபைக்கு கட்டளை கையளிக்கப்படாமல் இருந்ததுடன்,

விவசாய அமைச்சுக்கு 50 சதவீத கடற்றொழில் பங்களிப்பு கிடைத்த ரூபா 3,480,994 தொகையான மீன்பிடி உபகரணங்கள் 2017 நவம்பர் மாதத்தில் கட்டளையிடப்பட்டிருந்ததால் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பகிர்ந்தளிக்க முடியாமல் இருந்தன.

(கி) பிரதான செயலாளரின் அங்கீகாரமின்றி 2004 ஆம் ஆண்டின் போது விவசாய அமைச்சினால் வடமேல் மாகாண கூட்டுறவு கிராமிய வங்கியில் ஆரம்பிக்கப்பட்டிருந்த சுழற்சிக் கடன் நிதியத்திலிருந்து 2005 மற்றும் 2006 ஆம் ஆண்டுகளின் போது தம்பதெனிய அபிவிருத்தி மன்றத்திற்கு உடன்படிக்கையொன்று இல்லாமல் வழங்கப்பட்டிருந்த கடன்தொகையில் ரூபா 608,578 மற்றும் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகள் உள்ளடக்கப்படாமல் 2011 ஆம் ஆண்டின் போது மக்கள் வங்கியுடன் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கையின் பிரகாரம் வெளிநபரொருவருக்கு வழங்கப்பட்டிருந்த கடன்தொகையில் ரூபா 94,929 தொகையையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கீ) வடமேல் மாகாணத்தில் 791 பாடசாலைகளில் 31,667 மாணவர் மேசைகளும், 32,089 மாணவர் கதிரைகளும் 5,440 ஆசிரியர் மேசைகளும் 7,046 ஆசிரியர் கதிரைகளும் பற்றாக்குறையாக காணப்பட்ட போதிலும், அவற்றை வழங்குவதற்கு துரித வேலைத்திட்டமொன்று செயற்படுத்தப்பட்டிருக்க வில்லை.

(கு) கஷ்ட, மிகவும் கஷ்ட மற்றும் தனியான பாடசாலைகளில் மாணவ / மாணவிகளுக்கு பகிர்ந்தளிப்பதற்காக 2017 பெப்ரவரி முதல் யூலை வரை காலப்பகுதியில் குளியாப்பிட்டிய, குருணாகல், கிரிஉல்ல, நிகவரட்டிய, மஹவ மற்றும் இப்பாகமுவ ஆகிய வலயங்களுக்கு கல்வி அமைச்சின் மூலம் வழங்கப்பட்டிருந்த 36,632 சீருடை பைக்கற்றுக்கள் 2017 நவம்பர் வரையிலும் உரிய பாடசாலைகளுக்கு பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கூ) மஹவ வலய கல்வி அலுவகத்திற்கு 2017 மே, யூன் மற்றும் யூலை மாதங்களில் அனுப்பி வைக்கப்பட்டிருந்த 420 மாணவர்களின் ரூபா 9,234,000 ஆன புலமைபரிசில் பணத்தை மாணவர்களின் கணக்குகளுக்கு செலவு வைத்தலின் காலதாமதம் 04 மாதங்களாக இருந்தன.

(கெ) 2016 செப்தம்பர் 06 ஆந் திகதி 24/2016 ஆம் இலக்க கல்வி அமைச்சு செயலாளரின அபிவிருத்தி இலக்கினை நோக்கமாகக் கொண்ட நாட்டின் சகல பாடசாலைகளில் பிரதான திட்டத்தை (Master Plan) தயாரிப்பதற்குரிய

சுற்றறிக்கையின் பிரகாரம் 1215 வடமேல் மாகாண பாடசாலைகளுக்காக 2017 நவம்பர் 19 ஆந் திகதி ரூபா 42,490,000 வழங்கப்பட்டிருந்த போதிலும் 282 பாடசாலைகள் 2018 யூன் 30 ஆந் திகதி வரையிலும் பிரதான திட்டத்தை தயாரித்திருக்கவில்லை.

**6.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) குருணாகல் பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள 0.1910 ஹெக்டேயரான அளவிலான காணியொன்று உடன்படிக்கையொன்று இல்லாமல் 1992 ஆம் ஆண்டு முதல் தனியார் நிறுவனமொன்று உடமை கொள்வவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. 1992 ஆம் ஆண்டு முதல் 2000 ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய குத்தகை அறவிடப்படாதிருந்ததுடன், மதிப்பீடு அறிக்கையொன்று மூலம் குத்தகை பணம் நிச்சயிக்கப்படாமல் 2001 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) திக்வெல்ல குளத்தின் புனரமைப்பு வேலைகளுக்காக கூறுவிலைகள் மற்றும் முறையான உடன்படிக்கையொன்று இல்லாமல் பெற்றுக்கொண்ட பெக்கோ இயந்திரத்திற்காக 2017 திசெம்பர் 30 ஆந் திகதி ரூபா 300,000 கொடுப்பனவு செய்யும் போது ஒப்பந்தகாரரின் வேண்டுகோள் கடிதம் நீர்ப்பாசன பணிப்பாளரினால் தயாரிக்கப்பட்டிருந்தது.

(இ) வடமேல் மாகாணத்தின் பாடசாலை அடிப்படை கற்றல் அபிவிருத்தி மானியம் (SBLIG) பணத்திலிருந்து 2018 யூன் 29 ஆந் திகதி நியமனம் கிடைத்த புதிய பட்டதாரிகளின் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ரூபா 2,000,000 செலவிடப்பட்டிருந்தது.

(ஈ) நிக்கவரட்டிய சுகாதார மருத்துவ அலுவலகத்தினை நிர்மாணிப்பதற்கு 7,110 கிலோ கிராம் இரும்பு மதிப்பிடப்பட்டிருந்ததுடன், கட்டிடத்தில் கருத்தில் கொள்ளக்கூடிய வேறுபாடொன்று இடம் பெறாதிருக்கையில் மதிப்பிடப்பட்ட மிகைத்து 3,357 கிலோகிராம் கொள்வனவிற்காக ரூபா 671,400 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(உ) குளி/சென் ஜோசப் வித்தியாலத்தில் இரண்டு மாடிக் கட்டித்தின் திட்டமிட்டு நிர்மாணித்தலின் (அளவிட்டு பத்திரம் தயாரிக்கப்படாமல்) கீழ் நிர்மாணிக்கப்பட்ட செயற்திட்டமொன்றாக இருப்பதால் மாதாந்த பௌதீக செயன்முன்னேற்ற அறிக்கையை அடிப்படையாகக் கொண்ட பட்டியல்

கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான அறிக்கை எதுவும் இல்லாமல் 06 சந்தர்ப்பங்களில் ரூபா 34,415,308 ஒப்பந்தகாரருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) குளி/ வீரம்புவ கனிஷ்ட வித்தியாலயத்தின் கட்டிட நிர்மாண செயற்திட்டத்தின் உடன்படிக்கை காலஎல்லை 2016 நவம்பர் 16 ஆந் திகதி முதல் 2017 நவம்பர் 15 ஆந் திகதி வரையாக இருந்த போதிலும் 2018 சனவரி வரையிலும் நிர்மாண வேலையில் 50 சதவீதத்தையேனும் ஒப்பந்தகாரால் பொறியியலாளர், நிறுவனத்திற்கு கையளிக்கப்படாதிருக்கையில் நிர்மாணத்தை மேற்கொள்வதற்கு தயாரிப்பதற்கு ரூபா 1,542,500 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 6.5 நிதியத்தின் குறைப்பயன்பாடு

---------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பாடசாலை அடிப்படையாக கொண்ட கற்றல் அபிவிருத்தி மானியப் (SBLIG) இன் கீழ் வடமேல் மாகாணத்தில் 1215 பாடசாலைகளுக்கு ரூபா 58,000,000 வழங்கப்பட்டிருந்த போதிலும் 2018 யூன் 30 ஆந் திகதி வரையிலும் அப்பணத்திலிருந்து ரூபா 25,285,000 தொகை கற்றல் அபிவிருத்திற்காக செலவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) க.பொ.த (உ.தரம்) தொழில்நுட்ப விடயப்பரப்புடன் கூடிய தொழில்நுட்ப ஆய்வுக்கூடங்களில் செயல்முறை செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக பொருட் தொகுதிகளை பெற்றுக் கொள்வதற்காக வடமேல் மாகாணத்தின் தெரிவு செய்யப்பட்ட 18 பாடசாலைகளுக்கு ரூபா 200,000 வீதம் வழங்கப்பட்டிருந்த போதிலும் 17 பாடசாலைகள் 2018 யூன் 30 ஆந் திகதி வரையிலும் தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்திருக்கவில்லை.

(இ) மாகாண சபை அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் என்பவற்றின் 06 தலைப்புகளுக்குரிய 11 செலவின விடயங்களில் மொத்த தேறிய நிதி ஏற்பாட்டுப் பெறுமதியான ரூபா 16,973,000 தொகை முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தன.

(ஈ) மாகாண சபை அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் என்பவற்றின் 11 தலைப்புகளுக்குரிய பல்வேறு செலவின விடயங்களில் ரூபா 8,315,220,930 ஆன தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 4,488,864,998 ஆன

சேமிப்புக்கள் காணப்பட்டதுடன் அம்மீதிகள் தேறிய நிதி ஏற்பாட்டின் 50 சதவீதத்திற்கு 98 சதவீதத்திற்கும் இடைப்பட்டுக் காணப்பட்டன.

**6.6 விளைவற்ற / குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

------------------------------------------------------------------------------------------

பின்வரும் விடயம் அவதானிக்கப்பட்டன.

(அ) பண்டுவஸ்நுவர (மேற்கு) பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள 11 ஏக்கர் 02 ரூட் அளவிலான காணி, அக்காணியில் அமைந்துள்ள 08 பாடசாலைக் கட்டிடங்கள் மற்றும் அரசின் 4 கட்டிடங்கள் என்பன வருடக் கணக்கில் விளைவற்றும் / குறைப்பன்பாடுடனும் காணப்பட்டன.

(ஆ) மல்லவபிட்டிய பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள 11 காணித்துண்டுகளிலிலும் அவற்றில் நிர்மாணிக்கப்பட்டு 10,614 சதுரஅடி அளவிலான 14 கட்டிடங்கள் 02 ஆண்டுகள் முதல் 28 ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டன.

(இ) குருனாகல் பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள 48.5 ஏக்கர் பரப்பளவிலான காணி மற்றும் 5,400 சதுர அடி அளவிலான காணியுடன் கூடிய கட்டிடங்கள் நீண்ட காலமாக பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் கைவிடப்பட்டிருந்தன.

(ஈ) மாவத்தகம மாவட்ட வைத்தியசாலையின் 03 ஆம் இலக்க வார்ட் இற்காக 2011 பெப்ரவரி 22 ஆந் திகதி கிடைத்திருந்த கட்டிலுடன் கூடிய உபகரணங்கள் (Open cave System Radiant Warmer ) பயன்படுத்தப்படாமல் கொள்கலன் பெட்டியில் காணப்பட்டன.

(உ) மாவத்தகம மாவட்ட வைத்திசாலையின் இரண்டு மாடிக் கட்டிடத்தின் மேல் மாடி மற்றும் அதில் உள்ள 32 கட்டில்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டன.

(ஊ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிரதேச மருத்துவ வழங்கல் பிரிவிலும் குருணாகல் மாவட்ட வைத்தியசாலைகளிலும் மாத்திரம் ரூபா 55,239,725 ஆன தரத்தில் குறைந்த மருந்துகள் இருப்பொன்று காணப்பட்டது.

(எ) வடமேல் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்திற்குரிய 02 பிரதேச மருந்து வழங்கல் பிரிவுகளிலும் வைத்தியசாலைகள் மற்றும் 22 ஏனைய சுகாதார நிறுவனங்களிலும் முறையே ரூபா 550,525 மற்றும் ரூபா 1,880,876 ஆன காலாவதியான மருந்துகள் இருப்பொன்று காணப்பட்டது.

(ஏ) கல்கமுவ ஆதார வைத்தியசாலையின் 2017 ஆம் ஆண்டின் இறுதிவரை ரூபா 100,134,172 கூட்டுத்தொகையான சத்திரசிகிச்சை உபகரணங்கள் மற்றும் ரூபா 17,868,300 தொகையான மருத்துவ வாயு முறைமை 03 மாதங்கள் முதல் 20 மாதங்கள் வரையான காலப்பகுதியில் பயன்படுத்தப்படாதிருந்ததுடன் சில வைத்திய மருத்துவ உபகரணங்களின் உத்தரவதக் காலமும் பயன்படுத்தப்படாமல் முடிவடைந்திருந்தன.

(ஐ) லுனுவில பிரதேச வைத்தியசாலையில் ரூபா 989,856 செலவிடப்பட்டு கழிவுப்பொருள் சேகரிக்கும் நிலையமொன்று நிர்மாணிக்கப்பட்டு 08 மாதங்கள் கடந்திருந்த போதிலும் அது பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) நோயாளர்களின் சுகாதார தகவல்களை கணனிமயப்படுத்துவதற்காக 2012 ஆம் ஆண்டின் போது தம்பதெனியா ஆதார வைத்திசாலையில் 06 பிரிவுகளுக்கு வழங்கப்பட்டிருந்த 12 கணனி இயந்திரங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரை எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஔ) 2016 ஆம் ஆண்டின் போது வெள்ள நிவாரண உதவியாக சீனாவிடமிருந்த வடமேல் மாகாண சமூக சேவைகள் திணைக்களத்திற்கு கிடைத்திருந்த 1,440 சட்டிகளும் மற்றும் 2,398 ஆடைகளில் 86 சதவீதம் 02 ஆண்டுகளுக்கு அண்மித்த காலமாக பகிர்ந்தளிக்கப்படாமல் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்தன. பகிர்ந்தளிக்கப்பட பொருட்களுக்கு இடையே 31 சதவீதமான பொருட்கள் நோக்கத்திற்கு முரணாக பரிசுப் பொருட்களாக வழங்கப்பட்டிருந்தன.

**6.7 இனங்காணப்பட்ட நட்டம்**

--------------------------------------------

(அ) கல்கமுவ ஆதார வைத்தியசாலைக்கு கிணறொன்றை வெட்டுவதற்காக ரூபா 2,253,856 செலவு செய்திருந்த போதிலும் அதன் நீர் குடிப்பதற்கு பொருத்தமற்றதென தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை அறிவித்திருந்தது. இதன் பிரகாரம் முறையான ஆய்வொன்று இல்லாமல் நடவடிக்கை எடுத்த காரணத்தினால் மாகாண சபை நிதியத்திற்கு ரூபா 2,253,856 ஆன நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

(ஆ) ஹெட்டிபொல பிரதேச வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்ட கிணற்றின் நீர் குடிப்பதற்கு பொருத்தமற்றதாக இருக்கையில் வெளியிலிருந்து கொள்வனவு செய்வதற்காக 2015-2017 காலப்பகுதியில் ரூபா 652,325 செலவிடப்பட்டிருந்தது.

## 6.8 ஒப்பந்த நிர்வாகத்தின் குறைபாடுகள்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) குளி/சென் ஜோசப் விதியாலயத்தின் இரண்டு மாடிக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்குரிய 6 ஆவது பட்டியலின் பிரகாரம் நிறைவேற்றப்படாத 20 வேலை விடயங்களுக்காக ரூபா 767,139 ஒப்பந்தக்காரருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) பன்னல தேசிய பாடசாலையின் கட்டிமொன்றின் திருத்த வேலையின் போது 40 சதவீதமான மேலதிக வேலைகளுக்காக மாகாண நிதி விதி 34.2 இன் பிரகாரம் முறையான அங்கீகாரமின்றி ரூபா 1,931,484 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) சாரிபுத்திர மற்றும் கோனுல்ல ஆகிய ஆரம்ப பாடசாலைகளின் இரண்டு மாடி ஆரம்ப கற்பித்தல் வள நிலையங்களை நிர்மாணித்தல் பன்னல தேசிய பாடசாலையின் இரண்டு மாடி வகுப்பறைக் கட்டிட நிர்மாணம் மற்றும் அல் அமீன் வித்தியாலயத்தின் இரண்டு மாடி வகுப்பறைக் கட்டிட நிர்மாணத்தின் போது மதிப்பீட்டிற்கு உட்படாத விடயங்களுக்காக ரூபா 4,393,926 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) நிக/கடிகால மஹா விதியாலயத்தின் இரண்டு மாடிக் கட்டிடம், மஹகெலிய மஹா வித்தியாலயத்தின் இரண்டு மாடி தொழில்நுட்பக் கட்டிடம் மற்றும் கிளின்பொல ஆரம்ப வித்தியாலயத்தின் இரண்டு மாடி ஆரம்ப கற்பித்தல் நிலைய நிர்மாணத்தின் போது ஒப்பந்தக்காரர்களுக்கு ரூபா 14,457,675 ஆன முற்பணம் வழங்கப்பட்டு 04 மாதங்கள் முதல் 12 மாதங்கள் வரையான காலப்பகுதி வழங்கப்பட்டிருந்த போதிலும் வழங்கிய முற்பணத் தொகைக்கு ஈடாகும் வகையில் போதியளவு வேலைப்பகுதியொன்று நிறைவேற்றப்படாதிருந்ததாக 2018 பெப்ரவரி 01 ஆந் திகதி மேற்கொண்ட பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(உ) ஒப்பந்தக்காரரின் தரப்படுத்தல் வரையறைகளின் பிரகாரம் சீ-02 வகை ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு ஓராண்டு காலப்பகுதியில் ஆகக் கூடிய ஒப்பந்த பெறுமதி ரூபா 240 மில்லியனாக இருந்த போதிலும் வடமேல் பொறியியலாளர் திணைக்களத்தினால் மாத்திரம் 2016 ஆம் ஆண்டில் ரூபா 245.63 மில்லியனான ஒப்பந்தங்கள் தனியார் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது.

(ஊ) 2016 ஆம் ஆண்டின் போது தனியார் ஒப்பந்த நிறுவனமொன்றுக்கு கையளிக்கப்பட்டிருந்த 05 செயற்திட்டங்கள் 2015 யூன் 06 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருந்த 10 செயற்திட்டங்களுக்கான உடன்படிக்கை செய்யப்பட்ட காலஎல்லையை மிகைத்து 272 நாட்கள் முதல் 545 நாட்கள் கடந்திருந்த போதிலும் அந்த ஒப்பந்தத்திற்காக தாமதக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஏ) வடமேல் பொறியியலாளர் பணிப்பாளரின் 01/2017 தொழில்நுட்ப ஆலோசணை மூலம் பிரதேச பொறியியலாளர்களுக்கு அதிகாரத்தை கையளித்தமை காரணமாக பிரதேச பெறுகை குழு எல்லையை மிகைத்து குளியாப்பிட்டி மற்றும் வாரியபொல பிரதேச பொறியியலாளர் அலுவலகத்தினால் மூலம் மாத்திரம் முறையே ரூபா 28,441,294 மற்றும் ரூபா 5,211,733 ஆன ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது.

(ஏ) மதுரங்குளிய சுற்றுலா நிலையத்தின் வழங்கள் அலங்கார நடவடிக்கைகள் தொடர்பாக 2018 யூன் 30 ஆந் திகதி மேற்கொண்ட நிலையப் பரிசோதனையின் போது நிறைவேற்றப்படாத வேலைகளுக்காக ரூபா 1,365,489 மற்றும் குறைத்து நிறைவேற்றிய வேலைகளுக்காக ரூபா 663,871 ஒப்பந்தக்காரருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஐ) உடன்படிக்கையின் பிரகாரம் 2017 யூன் 29 ஆந் திகதி வேலை ஆரம்பிக்கப்பட்டு 2017 ஒக்தோபர் 27 ஆந் திகதி வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டிய ரூபா 10,386,969 மதிப்பீட்டு பெறுமதிக்கான உடப்பு வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவு தொடர்பாக 2018 சனவரி 30 ஆந் திகதி பௌதீக பரிசோதனையின் பிரகாரம் செய்யப்பட்டு வரும் ரூபா 1,334,378 தொகையான 12 பூர்த்தி விடயங்களாக அளவீட்டு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டு 2017 திசெம்பர் 31 ஆந் திகதி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. தாமத காலத்திற்காக ரூபா 176,502 அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 6.9 பதவியணி நிர்வாகம்

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மாகாண சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

### (அ) மாகாண சபை அமைச்சுகளினதும் திணைக்களங்களினதும் மற்றும் வலயக் கல்வி அலுவலக பதவியணியினர்

| | அங்கீகரிக்கப் பட்ட எண்ணிக்கை | உள்ளவாறான எண்ணிக்கை | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|---|
| சிரேஷ்ட மட்டம் | 717 | 542 | 175 |
| மூன்றாம் நிலை மட்டம் | 320 | 203 | 117 |
| இரண்டாம் நிலை மட்டம் | 5,244 | 4,330 | 914 |
| ஆரம்ப மட்டம் | 1,414 | 1,330 | 84 |
| **மொத்தம்** | **7,695** | **6405** | **1,290** |

### (ஆ) பாடசாலைப் பதவியணியினர் வலய அலுவலகம் தவிர)

| | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ளவாறான எண்ணிக்கை | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|---|
| பாடசாலை அதிபர்கள் | 1,915 | 1,347 | 568 |
| ஆசிரியர்கள் | 26,383 | 23,918 | 2,465 |
| சிற்றூழியர் | 2,696 | 2,502 | 194 |
| ஏனையவை | 503 | 324 | 179 |
| **மொத்தம்** | **31,497** | **28,091** | **3,406** |

**(இ) மருத்துவமனைப் பதவியணி**

| | அங்கீகரிக்கப் பட்ட எண்ணிக்கை | உள்ளவாறான எண்ணிக்கை | வெற்றிட எண்ணிக்கை | மேலதிக எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| மருத்துவமனைப் பதவியணியினர் | 7,101 | 5,882 | 1,639 | 420 |
| அலுவலகப் பதவியணியினர் | 1,657 | 1,473 | 184 | - |
| **மொத்தம்** | **8,758** | **7,401** | **1,677** | **280** |

**(ஈ) அமைச்சரவை பதவியணியினர்**

| | அங்கீகரிக்கப் பட்ட எண்ணிக்கை | உள்ளவாறான எண்ணிக்கை | வெற்றிட எண்ணிக்கை | மேலதிக எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| பிரத்தியேக செயலாளர் | 05 | 05 | -- | - |
| கூட்டிணைப்பு செயலாளர் | 06 | 05 | 01 | - |
| ஊடகச் செயலாளர் | 02 | 02 | - | - |
| பொதுமக்கள் தொடர்பு உத்தியோகத்தர் | 05 | 05 | - | - |
| பிரத்தியேக உதவியாளர் | 05 | 05 | - | - |
| முகாமைத்துவ உதவியாளர் | 13 | 13 | - | - |
| அலுவலக உதவியாளர் | 10 | 10 | - | - |
| ஏனைய (சாரதிகள்) | 10 | 13 | - | 03 |
| **மொத்தம்** | **56** | **58** | **01** | **03** |

**(உ) உள்ளூராட்சி நிறுவனப் பதவியணி**

| | அங்கீகரிக்கப் பட்ட எண்ணிக்கை | உள்ளவாறான எண்ணிக்கை | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|---|
| சிரேஷ்ட மட்டம் | 28 | 16 | 12 |
| மூன்றாம் நிலை மட்டம் | 48 | 17 | 31 |
| இரண்டாம் நிலை மட்டம் | 1,307 | 879 | 428 |
| ஆரம்ப மட்டம் | 3,369 | 3,169 | 200 |
| **மொத்தம்** | **4,752** | **4,081** | **671** |

**(ஊ) சட்டவாக்கத்தின் மூலம் நிறுவப்பட்ட நிறுவனங்களது பதவியணி (மாகாண சபை)**

| | அங்கீகரிக்கப் பட்ட எண்ணிக்கை | உள்ளவாறான எண்ணிக்கை | வெற்றிட எண்ணிக்கை | மேலதிக எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட மட்டம் | 35 | 20 | 15 | - |
| மூன்றாம் நிலை மட்டம் | 36 | 63 | - | 27 |
| இரண்டாம் நிலை மட்டம் | 211 | 180 | 31 | - |
| ஆரம்ப மட்டம் | 277 | 213 | 64 | - |
| **மொத்தம்** | **559** | **476** | **110** | **27** |

குறிப்பு : மாகாண சபை உத்தியோகத்தர்களுக்கு 183 அமைய பதவியணியனர் காணப்பட்டனர்.

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

### 6.9.1 மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் (கல்வி மற்றும் சுகாதாரம் தவிர) நிறுவனங்களின் பதவியணியினர்

வடமேல் மாகாண அரச சேவையின் உத்தியோகத்தர்களின் நியமனம், சேவையில் நிரந்தரமாக்குதல் மற்றும் பதவி உயர்வு என்பன மாகாண அரசாங்க சேவைகள் துணைக் குழுவின் பிரதான செயற்பாடாக இருந்த போதிலும் 2012 ஆம் ஆண்டு முதல் 13 பிரதேச சபைகளுக்காக செயலாளர் பதவியில் கடமை மேவுகைக்கான நியமனம் உள்ளூராட்சி மன்ற ஆணையாளரால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 6.9.2 பாடசாலைப் பதவியணியினர்

(அ) வட மேல் மாகாண கல்வித் திணைக்களம், 03 வலய அலுவலகங்களிலும் கோட்டக் கல்வி அலுவலகமொன்றிலும் 125 பாடசாலைகளில் சேவையில் ஈடுபட்டுள்ள உதவி கல்வி பணிப்பாளர் உட்பட 200 உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் சேவை வெவ்வேறு காரணங்களின் பேரில் நிரந்தரமாக்கப்படாதிருந்ததுடன் சில ஆசிரியர்களின் சேவை நியமனத் திகதியிலிருந்து 28 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் நிரந்தரமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2007 திசெம்பர் 13 ஆந் திகதிய 2007/20 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3.2 ஆம் பந்தியின் பிரகாரம் மிகவும் வசதியான பாடசாலைகளுக்குரிய பாடசாலையொன்றின் ஆசிரியர்களின் ஆகக்கூடிய சேவைக்காலம் 06 ஆண்டுகளாக இருந்த போதிலும் 06 ஆண்டு முதல் 26 ஆண்டுகள் வரை ஒரே பாடசாலையில் சேவையில் ஈடுபட்டிருந்த 536 ஆசிரியர்கள் இருப்பது தெரிவுப் பரிசோதனையின் போது கண்டறியப்பட்டது.

(இ) 67 பாடங்களுக்குரிய 1503 ஆசிரிய வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் பிரதான விடயங்களான கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கில ஆகிய பாடங்களுக்கான ஆசிரியர் வெற்றிடங்கள் முறையே 145, 64 மற்றும் 132 ஆக இருந்தது. அவ்வெற்றிடங்கள் காரணமாக பாடங்களில் நிபுணத்துவம் இல்லாத இந்த ஆசிரியர்கள் அவ்வெற்றிடமான பாடங்களில் கற்பித்த நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

(ஈ) சிலாபம் கல்வி விடயத்தின் 6-10 ஆண்டுகள் வரை இடமாற்றம் பெறாத 961 ஆசிரியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கையில் பதில்கள் ஒருவரது இல்லாமை இருந்தமை மற்றும் பூரணமற்ற விண்ணப்பங்கள் காரணமாக 114 ஆசிரிய இடமாற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டிருந்தன.

(உ) சிலாபம் வலய ஆசிரிய இடமாற்றம் மேன்முறையீட்டு சபையின் தலைவராக வலயக் கல்வி பணிப்பாளர் அல்லது அவரின் பதிலால் இல்லாமல் இருந்ததுடன் ஆசிரிய இடமாற்ற சபையை பிரதிநிதித்துவப்படுத்தாத இரண்டு நிறைவேற்று உத்தியோகத்தர்கள் மேன்முறையீட்டு சபைக்கு நியமிக்கப்பட்டிருந்தனர்.

(ஊ) வடமேல் மாகாணத்தில் 299 பாடசாலைகளில் காணப்பட வேண்டிய அதிபர் தரத்திலுள்ள அதிபர்களுக்குப் பதிலாக அதற்கு குறைந்த தரத்தையுடைய அதிபர்களும் 153 பாடசாலைகளில் உயர்தர அதிபர்களும் 158 பாடசாலைகளில் இலங்கை ஆசிரிய சேவையின் ஆசிரியர்களும் அதிபர் சேவை பதவிகளில் கடமைகளை நிறைவேற்றி வந்தனர்.

### 6.9.3 சுகாதாரப் பிரிவின் பதவியணியினர்

-------------------------------------------------

(அ) மாகாண ஆயுர்வேதத் திணைக்களத்தின் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி விபரத்தின் பிரகாரம் 04 பதவிகளில் 194 உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள் மற்றும் ஒரு பதவியில் 03 உத்தியோகத்தர்களுக்கு மேலதிகமும் நிலவின.

(ஆ) 2017 ஆம் ஆண்டு வரை வட மேல் மாகாணத்தின் சனத்தொகையில் 100,000 பேருக்கு வைத்தியர்கள் 36 மற்றும் தாதியர் பதவியணியினர் 55 ஆக இருந்தது. தீவு முழுவதுமான வைத்தியர்களின் விகிதம் 55 ---- 175 ஆக இருந்தமையால் வடமேல் மாகாணத்தில் நோயாளர் உதவிச் சேவைகளுக்கான பதவியணியினர் பற்றாக்குறையாக காணப்பட்டன.

(இ) வடமேல் மாகாணத்தின் வைத்தியசாலையின் மற்றும் சுகாதார மருந்து நிறுவனங்களில் சேவையில் ஈடுபட்டுள்ள 154 விசிரும் இயந்திர செயற்பாட்டார்களுக்கு பதவிக்குரிய கடமையொன்று காணப்படவில்லை.

(ஈ) நவீனமயப்படுத்தப்பட்ட கல்கமுவ வைத்தியசாலையின் நோயாளர் சுகாதாரச் சேவையை முழு அளவில் செயற்படுத்துவதற்காக 16 விஷேட வைத்திய நிபுணர்கள், 94 வைத்தியர்கள் 150 தாதி/ஆண் தாதிகள் இணைக்கப்பட வேண்டியிருந்தனர். எனினும் 2017 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும்

இரண்டு விஷேட வைத்திய நிபுணர்கள், 18 வைத்தியர்கள் 53 தாதி/ஆண் தாதிகள் மாத்திரம் இணைக்கப்பட்டிருந்தனர்.

(உ) முறையான இடமாற்றக் கொள்கையொன்று செயற்படுத்தப்படாமையால் குருனாகல் மாவட்ட சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகம் உட்பட 06 வைத்தியசாலைகள் வைத்தியர், தாதிகள், முகாமைத்துவ உதவியாளர் மற்றும் 357 சிற்றூழியர்கள் 05 முதல் 28 ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் ஒரே இடத்தில் சேவை புரிந்து வந்தனர்.

**6.10 வங்கிக் கணக்குகள்**

சிலாபம் கூட்டுறவு உப ஆணையாளர் அலுவலகத்தில் தீர்ப்பாளர் நடவடிக்கைகள் தொடர்பான நடைமுறைக் கணக்கில் ரூபா 11,133,126 ஆன மீதியொன்று தரப்பினருக்கு தீர்வுசெய்யப்படாமல் நீண்டகாலமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

**7. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**7.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மாகாண அமைச்சுக்கள்/ திணைக்களங்கள் மற்றும் 09 நிறுவனங்களது அரச உத்தியோகத்தர்களது முற்பண நடவடிக்கைகள் சம்பந்தமான செலவினத்தின் அதி கூடிய எல்லை மிகைகளின் கூட்டுத்தொகை ரூபா 5,287,644 ஆக இருந்தது.

**8. முறைமைகளும் கட்டுபாடுகளும்**

கீழே குறிப்பிடப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் மாகாண சபையின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமை | | முறைமையிலுள்ள குறைபாடுகள் |
|---|---|---|---|
| (அ) | கணக்கீடு | (i) | நிலுவை வருமானம் கணக்கீடு செய்யாமை |
| | | (ii) | பலவீனமான பேரேட்டுக் கட்டுப்பாடு |
| (ஆ) | மனிதவள முகாமைத்துவம் | (i) | ஊழியர் நிர்வாகத்தின் பலவீனமாக காணப்படல் |
| | | (ii) | பதவியணியினர் வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படாமை |
| (இ) | செயற்திட்டங்களை செயற்படுத்தல் | (i) | செயற்திட்டங்களை திட்டமிடுவதில் பலவீனம் காணப்பட்டமை |

| | | | |
|---|---|---|---|
| | | (ii) | செயற்திட்ட முகாமைத்துவத்தில் பலவீனம் காணப்பட்டமை |
| | | (iii) | பின்தொடர் நடவடிக்கை இடம்பெறாமை |
| (ஈ) | நியதிச்சட்ட அடிப்படையில் தாபிக்கப்பட்ட நிறுவனங்களின் நிதி நடவடிக்கைகள் மற்றும் செயற்பாட்டுக் கட்டுப்பாடு | (i) | வருமானத்தை ஈட்டுவதற்கு நடவடிக்கை எடுக்காமை |
| | | (ii) | கடன் முகாமைத்துவத்தில் பலவீனம் காணப்பட்டமை |
| | | (iii) | சொத்துக்கள் முகாமைத்துவத்தில் பலவீனம் காணப்பட்டமை |
| (உ) | வாகனக் கட்டுப்பாடு | (i) | திருத்தங்கள் மற்றும் பராமரிப்பு முறைப்படி இடம்பெறாமை |
| | | (ii) | சேதங்கள் தொடர்பான பரிசோதனை துரிதமாக இடம்பெறாமை. |